# 5. KMkyhj

## 5.1. r%f thoT;ld;njhlh;Gila nfhLf;fy; thqf;fy;

- ஒரு முஸ்லிம் எப்பொழுதும் ஹலாலான முறையிலேயே உழைக்க வேண்டும்.
- நேர்மையுடன் வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவன் அல்லாஹ்வின் அருளுக்குரியவனாகிறான்
- தேவையுள்ளவனுக்கு கடன் கொடுப்பதும் அந்தக் கடனை அடைப்பதற்கு உதவுவதும் மு.ஃமினின் பண்பாகும்.
- கடன் படுபவர் தான் பெறும் கடனுக்குப் பகரமாக ஏதேனும் ஒருபொருளை ஈடாகக் கொடுப்பதன் மூலம் கடன் கொடுத்தவரின் நம்பிக்கையைப் பெறுகின்றார்.
- அவசியம் ஏற்படும்போது வாடகை ஒப்பந்தம் செய்வதை இஸ்லாம் அனுமதித்துள்ளது.
- பிறர் பொருளை முறையற்று அனுபவிக்கும் பயங்கரமான முறையே வட்டியாகும்.
- வட்டியுடன் தொடர்பு கொள்பவன் இஸ்லாத்தின் போதனைகளை மீறிய குற்றத்திற்கு ஆளாகின்றான்

மனிதவாழ்வுக்குப் பல தேவைகள் உள்ளன. அவற்றில் உணவு, உடை, வீடு, வாகனம், குடும்பம் என்பன முக்கியமாகும். இவற்றைப் பல வழிகளில் அடைந்து கொள்ள மனிதன் முயற்சிக்கிறான். அவை ஹலாலான முறையில் அமைய வேண்டுமென்று இஸ்லாம் போதிக்கிறது.

" كَسْبُ الْحَلاَلِ فَرِيْضَةٌ "

‘‘ஹலாலாக சம்பாதிப்பது கடமையாகும்’’. ஏ்னபது நபி மொழியாகும்.

மனிதன் ஹலாலான முறையில் உழைத்து வாழ்வதே கண்ணியம். அல்லாமல் கையேந்தி வாழ்வது கேவலமாகும். இதனைப் பின்வரும் நபி மொழி தெளிவு படுத்துகிறது.

" لَأَنْ يَأْخُذَ أَحَدُكُمْ حَبْلَهُ فَيَأْتِيْ بِحُزْمَةِ الْحَطَبِ فِيْ ظَهْرِهِ فَيَبِيْعَهَا فَيَكُفَّ اللهُ
بِهَا وَجْهَهُ خَيْرٌ لَهُ مِنْ أَنْ يَسْأَلَ النَّاسَ أَعْطَوْهُ أَوْ مَنَعُوْهُ "

“உங்களில் ஒருவர் கையில் கயிற்றை எடுத்துக் கொண்டு (காட்டில் சென்று) விறகுக் கட்டைச் சுமந்து வந்து விற்பனை செய்து வாழ்கிறார். அதனால் அல்லாஹ் அவரை (பிறரிடம் தங்கி நிற்பதிலிருந்து) பாதுகாக்கிறான். இவ்வாறு வாழ்வது மக்களிடம் யாசகம் கேட்பதை விடச் சிறந்தது. மக்கள் கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி”. எனவே நாம் எமது பொருளீட்டல் முறையை இஸ்லாமிய வரையறைக்குள் அமைப்போமானால் அது பரகத் மிக்கதாக அமையும். வாழ்வில் நிம்மதியை ஏற்படுத்தும் அது மட்டுமின்றி அத்தொழில் வணக்கமாகவும் மாறும்.

தொழில்களில் மிகச்சிறப்பானது விவசாயமாகும். அதற்குப் பிறகு வியாபாரம் முக்கிய இடத்தை வகிக்கிறது. அதில் ஏமாற்று, மோசடி என்பன இடம்பெறக் கூடாது என அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

அல்லாஹ் அல்குர்ஆனில் : " لَا تَأْكُلُوْا أَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ "

“உங்களில் ஒருவர் மற்றவரின் பொருட்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள் - என்று கூறியுள்ளான்.”. **(04:29)**

அதனால் தான் வட்டி வாங்குதல், மோசடி செய்தல், ஏமாற்றுதல், இலஞ்சம் வாங்குதல் போன்ற அனைத்தையும் இஸ்லாம் தடை செய்கிறது.

வியாபாரம் போலவே வேறு சில வழிகளிலும் ஒருவருக்குச் சொத்துக்கள் வந்து சேர்கின்றன.

**அவற்றில் சில**

- **வஸிய்யத்**
- **வராஸத்**

மேற்கூறப்பட்ட ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனியாகப் பின்னர் விளங்குவோம்.

முன்னைய வகுப்புக்களில் உழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்த நீங்கள் பொருளீட்டலுக்கான பல வழிமுறைகள் இருப்பதையும் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். அவற்றில் கூட்டு வியாபாரம், அடகு, வாடகை என்பன சிலவாகும்.

மேலும் தொழில் முயற்சிகளுக்கு கடன் முக்கிய பங்கு வகிக்கிறது. சில வேளை அக்கடன் வட்டியுடன் தொடர்புடையதாகவும் அமைகிறது. அவற்றைப் பற்றியும் கவனிப்போம்.

## கூட்டு வியாபாரம்

மனித அறிவு, ஆற்றல், செல்வம் போன்றன ஒருவருக்கொருவர் வித்தியாசமானவைகளாகக் காணப்படுகின்றன. வாழ்வதற்குத் தேவையான எல்லா விடயங்களையும் ஒருவர் தனியாக நின்று பெற முடியாது.

சிலரிடம் நிறைய செல்வம் இருக்கும், ஆனால் அதனை விருத்தி செய்து கொள்ளும் ஆற்றல் இருக்காது. வேறு சிலரிடம் செல்வத்தை விருத்தி செய்யும் ஆற்றல் இருக்கும், ஆனால் அவர்களிடம் அதற்குரிய உடல் பலம், அல்லது தேவையான மூலதனம் இருக்காது. இவ்வாறு பலரிடமும் பிரிந்து காணப்படும் வளங்களும், ஆற்றல்களும் ஒன்று சேரும் போது இலாபம் தரும் கூட்டுமுயற்சியாக அமையப் பெறுகிறது. கூட்டுவியாபாரம் என்பது சிலரது செல்வமும் மற்றும் சிலரது ஆற்றலும் ஒன்றிணைந்த தொழில் முயற்சியாகும். இதன் மூலம் ஒற்றுமை உண்டாகிறது. சமூகத்தின் பல தேவைகள் நிறைவேறக் காரணமாகிறது. மேலும் கூட்டுவியாபாரம் மூலம் பொருளீட்டுவது அபிவிருத்தி நிறைந்ததாகும். 'ஹதீஸுல் குத்ஸியில் அல்லாஹ்', கூறுகிறான்:

"أَنَا ثَالِثُ الشَّرِيْكَيْنِ مَا لَمْ يَخُنْ أَحَدُهُمَا "

"இருவர் கூட்டுவியாபாரம் செய்யும் போது அவர்கள் இருவரில் ஒருவர் மோசடியில் ஈடுபடாத வரை நான் மூன்றாவதாக அவர்களுக்கு உதவியாளனாக இருக்கிறேன். (நூல் அபூதாவுத்)

இதிலிருந்து கூட்டுவியாபாரத்தின் முக்கியத்துவத்தைஅறிந்து கொண்டோம்.

கூட்டுவியாபாரத்தின் போது பின்வரும் விடயங்கள் இன்றியமையாததாகும்.

- **இலாப நட்ட ஒப்பந்தத்துக்கு ஏற்றாற் போல் பங்கு வைக்கப்படல்.**
- **வியாபார நடவடிக்கைகளில் புரிந்துணர்வுடன் செயற்படல்.**

கூட்டுவியாபாரம் பங்காளிகளில் ஒருவரோ அல்லது எல்லோருமே பிரிந்து விடுவதால் அல்லது மரணித்து விடுவதால் காலவதியாகும்.

**பயிற்சி**

1. **கூட்டுவியாபாரம் என்றால் என்ன?**
2. **கூட்டுவியாபாரத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.**
3. **கூட்டுவியாபாரத்தின் நிபந்தனைகள் யாவை?**
4. **கூட்டுவியாபாரத்தின் நன்மைகளைக் குறிப்பிடுக.**
5. **கூட்டுவியாபாரம் காலவதியாவதற்குரிய ஒரு காரணத்தைக் கூறுக.**
6. **கூட்டுவியாபாரம் பற்றி கூறப்பட்டுள்ள ஹதீஸுல் குத்ஸியைக் குறிப்பிடுக.**

## (I) கடன்

நாம் எமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள சில சந்தர்ப்பங்களில் பிறர் உதவியை நாடுகின்றோம். பொருள்ரீதியான, பணரீதியான உதவியைக் கடன் என்ற வகையில் பெற்றுக்கொள்கின்றோம். இது இஸ்லாம் அனுமதித்த ஒன்றாகும். தேவை ஏற்படும் போது ஒருவனுக்குக் கடன் கொடுப்பது தர்மமான செயல் என்று இஸ்லாம் போற்றுகின்றது.
அல்லாஹ் அல்குர்ஆனில்

" مَنْ ذَا الَّذِيْ يُقْرِضُ اللهَ قَرْضًا حَسَنًا فَيُضَاعِفَهُ لَهُ أَضْعَافًا كَثِيْرَةً "

"அல்லாஹ்வுக்காக அழகிய கடன் கொடுப்பவர் யார்! அவருக்கு அல்லாஹ் அதனைப் பன் மடங்காகப் பெருக்கி நன்மை கொடுப்பான்" எனக் கூறியுள்ளான்.

அதுமட்டுமன்றி தேவையின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூட கடன் வாங்கியதாக வரலாறு கூறுகின்றது.

கடன் வாங்குபவர் தேவைக்காவேயன்றி அதனை வழக்கமாக்கிக் கொள்ளக் கூடாது என்பது இஸ்லாத்தின் அரும் போதனையாகும். திருப்பிக் கொடுக்கும் எண்ணத்துடனேயே கடன் பெற வேண்டும் என்றும் இஸ்லாம் வற்புறுத்துகின்றது.

ஒருவர் இறந்து விட்டால் அவருடைய ஜனாஸாவுக்குரிய ஏற்பாடுகளில் முதன்மையானது அவப்பட்ட கடனை அடைப்பதாகும். கடனோடு மரணித்த ஒருவரின் ஜனாஸாத் தொழுகையை நடாத்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வாங்கினார்கள்.

ஒரு சமயம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னிலையில் ஒரு ஜனாஸா கொண்டு வரப்பட்டது. நபியவர்கள் தொழுகை நடத்த முன் வந்தார்கள் திடீரென மக்களைப்பார்த்து "இவர் யாருக்கும் கடன் கொடுக்க வேண்டியுள்ளதா?" எனக் கேட்டார்கள். அதற்கு ஒருவர் "ஆம் எனக்கு இவர் கடன் தர வேண்டியுள்ளது." என்றார். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்கள் ஜனாஸாவுக்கு நீங்களே தொழுகை நடத்துங்கள் எனக்கூறி பின்வாங்கினார்கள். அப்போது ஒருவர் "இவர் கொடுக்க வேண்டிய

கடனை நான் பொறுப்பு எடுக்கிறேன்'' என்றார். பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகை நடத்தினார்கள்.

எனவே கடன் என்பது மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும். உரிய முறையில் கடனைத் திருப்பிக் கொடுக்காவிடின் விசாரணைக்கு உட்பட வேண்டியேற்படும்.

அதனால்தான் கடன் எடுப்பவருக்கும், கொடுப்பவருக்கும் இருக்க வேண்டிய சில நிபந்தனைகளை இஸ்லாம் வகுத்துள்ளது.

**அவை :**

1. **கடன் கொடுப்பவரும், எடுப்பவரும் புத்திசுயாதீனமுள்ள, வயதுவந்தவராக இருத்தல்.**
2. **கடன் கொடுக்கும் போது சாட்சி இருத்தல், அதனை எழுதி வைத்துக் கொள்ளல்**
3. **கடன் கொடுக்கும் போது நிபந்தனைகள் விதிக்காதிருத்தல்.**

கடன் வாங்கியவர் வசதியிருந்தும் திருப்பிச் செலுத்தாமல் இருப்பது பெருங்குற்றமாகும். அவர் தண்டிக்கப்படவும், இழிவுபடுத்தப்படவும் ஷரீஅத் அனுமதியளித்துள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

" مَطْلُ الْغَنِيِّ ظُلْمٌ "

''வசதியிருந்தும் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இருப்பது அநியாயமாகும்'' என்று கூறியுள்ளார்கள்.

அவ்வாறே கடன் வாங்கியவர் நியாயமான காரணங்களை வைத்து உரிய தவணையில் செலுத்த முடியாமல் போனால், கடன் தந்தவருக்குத் தகவல் கொடுக்க வேண்டும். அதனை அவர் ஏற்றுத் தவணை கொடுக்க வேண்டுமென அல்லாஹ் கூறியுள்ளான்.

" وَإِنْ كَانَ ذُوعُسْرَةٍ فَنَظِرَةٌ إِلَى مَيْسَرَةٍ "

''கடன் எடுத்தவர் கடனைக் கொடுக்க வசதியற்றவராக இருப்பின் வசதி ஏற்படும் வரை தவணை கொடுங்கள்'' என அல்குர்ஆன் உபதேசிக்கிறது. (02:280)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் :

" مَنْ يَسَّرَ عَلَى مُعْسِرٍ يَسَّرَهُ اللهُ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ "

“யார் வசதியற்றவருக்கு இலகுவான நிலையை ஏற்படுத்திக் கொடுக்கிராரோ இம்மையிலும், மறுமையிலும் அவருடைய சிரமங்களை அல்லாஹ் இலகு படுத்துகிறான்”.

**பயிற்சிகள்**

**01. கடன் கொடுப்பவருக்குக் கொடுக்கப்படும் கூலியைப்பற்றி வந்த குர்ஆன் வசனத்தைக் குறிப்பிடுக.**

**02. கடன் பெற்றவர் திருப்பிக் கொடுக்க முடியாத போது என்ன செய்யவேண்டும்**

**03. கடன் கொடுத்தவர் கடன் பெற்றவருடன் மிருதுவாக நடந்து கொள்வதற்குரிய ஒரு ஹதீஸை கூறுக.**

**04. கடன் வாங்குவதை வழக்கமாக்கிக் கொள்வதால் ஏற்படும் சில பாதிப்புக்களைச் சிந்தித்து விளக்குக.**

**05. கடன்பற்றிய 2:282ம் அல்குர்ஆன் வசனத்தின் பொருளைத் தருக.**

## (II) அடகு

**வகுப்பில் ஆசிரியர் ஸலாம் கூறிக் கொண்டு நுழைகிறார்.**

**ஆசிரியர் : அஸ்ஸலாமு அலைக்கும்.**

**மாணவர்கள் : வஅலைக்குமுஸ்ஸலாம்.**

**பின்னர் முன்னைய நாள் படித்த பாடங்களைப்பற்றி ஆசிரியரும் மாணவர்களும் கலந்துரையாடுகின்றனர். தொடர்ந்து ஆசிரியர் சில கேள்விகளைக் கேட்கிறார்.**

**ஆசிரியர் : கடன் கொடுப்பதன் சிறப்பு பற்றி யாருக்குத் தெரியும்?**

**பாரிஸ் : ஆசிரியரே, எனக்குத் தெரியும். அது பற்றி வந்த ஹதீஸ் ஒன்றைக் கூறட்டுமா?**

**ஆசிரியர் : ஆம் கூறுங்கள்.**

**பாரிஸ்** : "ஒருவர் இருமுறை கடன் கொடுத்தால் ஸதகா கொடுத்த நன்மை கிடைக்கும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

**ஆசிரியர்** : கடன் வாங்குபவர் ஏதேனும் ஒன்றை உத்தரவாதமாக வைப்பதைg gwwநீங்கள் அறிவீர்களா?

**மாணவர்கள்** : அடகு வைப்பது என்று கேள்விப்பட்டிரு f கிறோம். ஆனால் விபரம் தெரியாது.

**ஆசிரியர்** : ஆம், ஒருவர் கடன் வாங்கும் போது ஏதேனும் பொருளை அக்கடனுக்கு உத்தரவாதமாக வைப்பதை அடகு வைத்தல் அல்லது ஈடு வைத்தல் என்று சொல்வார்கள். அது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

"وَإِنْ كُنْتُمْ عَلَى سَفَرٍ وَلَمْ تَجِدُوْا كَاتِبًا فَرِهَانٌ مَقْبُوْضَةٌ "

**நீங்கள் பயணத்தில் இருக்கும் போதும் கடனைப் பதிவு செய்து கொள்ளும் ஒருவர் இல்லாத போதும் நீங்கள் கைப்பற்றும் ஈடு ஆகுமாக்கப் பட்டுள்ளது. (02:283)**

**மாணவர்கள் :-** **இன்னும் விபரமாக சொன்னால் பிரயோசனமாக இருக்குமே**

**ஆசிரியர்** : மாணவர்களே! சில சமயம் உங்கள் பெற்றோர்களுக்கு ஏதேனும் ஒரு தேவை நிமித்தம் பெரிய தொகைக் கடன் ஒன்றைப் பெற்றுக் கொள்ள அவசியப்படலாம். திடீரென ஏற்பட்ட அத்தேவையை நிறைவேற்ற கடன் பெற்றுக் கொள்ள முடியும். அதனை கௌரவமாக அடைந்து கொள்வதையே அவர்கள் விரும்புவார்கள். அதற்காக உங்கள் வீட்டின் உறுதியை, அல்லது உங்கள் தகப்பனாரின் வாகனத்தை எடுத்துச் சென்று கடன் கொடுப்பவரிடம் ஒப்படைத்து விரும்பிய தொகையைப் பெற்றுக் கொள்ளக் கூடும். இவ்வாறு பெறும் கடனுக்கு உத்தரவாதமாகப் பொருள் ஒன்றை வைப்பதையே ஈடு, அடகு என்று சொல்லப்படுகிறது.

**நஸீர்** : நீங்கள் கூறியது போன்ற ஒரு சம்பவம் எங்கள் தகப்பனாருக்கு ஏற்பட்டது. எனது சிறிய சகோதரன் வைத்திய சாலையில் சத்திர சிகிச்சைக்கு உட்பட்ட சமயம் பணம் செலுத்த என் தகப்பனாரால் முடியாமல் போனது. உடனே அவர் எமது வீட்டின் உறுதியை எடுத்துச் சென்று பள்ளிவாசல் பைத்துல்மால் நிதியத்தில் கடன் பெற்றார். இரண்டொரு வாரங்களின் பின்னர் எடுத்த கடனைத் திருப்பிக் கொடுத்து உறுதியை மீளப்பெற்றுக் கொண்டார்.

**ஆசிரியர்** : இவ்வாறு செய்வதையே ஈடு (அடகு) எனப்படுகிறது. அது பின்வரும் நிபந்தனைகளுடன் நடைபெற வேண்டும்.

- **ஈட்டு ஒப்பந்தம் தனியாகவும், கடன் ஒப்பந்தம் தனியாகவும் நடைபெற வேண்டும்.**
- **ஈடு வைக்கப்படும் பொருள் விற்பனை செய்ய முடியுமானதாக இருத்தல் வேண்டும்.**

**மாணவர்கள்** : ஈடு வைக்கப்பட்ட பொருளைக் கடன் கொடுத்தவர் பயன்படுத்தலாமா?

**ஆசிரியர்** : இல்லை, ஈட்டுப் பொருளை ஈடுபெற்றவர் பயன்படுத்துவதற்கோ, அதிலிருந்து கிடைக்கும் இலாபங்களை எடுத்துக் கொள்வதற்கோ அனுமதியில்லை. அப்பொருளின் பராமரிப்புச் செலவுகள் அனைத்தும் உரிமையாளரின் பொறுப்பகும்.

**மாணவன்** : கடன் வாங்கியவரால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போனால் ஈட்டுப் பொருளைக் கடன் கொடுத்தவர் தனதாக்கிக் கொள்ளலாமா?

**ஆசிரியர்** : முடியாது, ஈட்டுப் பொருளை உரிமையாளர் விற்பனை செய்து கடன் தொகையை கொடுத்து விட வேண்டும்.

**மாணவர்கள்** : அல்ஹம்துலில்லாஹ்! இன்று மிக முக்கியமான விடயங்களைத் தெரிந்து கொண்டோம். ஜஸாகுமுல்லாஹு ஹைரா.

## (III) வாடகை

மனிதன் தன்னுடைய தேவைகளை அடைந்து கொள்ள பிறருடைய உதவியை நாடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. விஷேசமாக வாகனம், வீடு, உபகரணங்கள் போன்றன இல்லாதவர்கள் பிறரிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்கிறார்கள். அவ்வாறு பெறுவதை இரவலாகவோ, வாடகையாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.

இங்கு நாம் வாடகையைப் பற்றிப் பார்ப்போம். ஒரு பொருளிலிருந்து அடைந்து கொள்ளும் பயன்பாட்டுக்குப் பகரமாக செலுத்த வேண்டியதையே வாடகை என்றும் மனித முயற்சிக்குப் பகரமாக வழங்கப்படுவதை கூலி என்றும் குறிப்பிடுறோம்.

நபி சுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தனது தோட்டத்தில் வேலை பார்ப்பதற்காக கூலிக்கு அமர்த்தினார்கள்.

இஸ்லாம் அளித்த பொருளீட்டல் முறைகளில் வாடகையும் ஒன்றாகும். அது நிறைவேறப் பின்வரும் அம்சங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

★ வாடகை ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர் பருவமடைந்தவராகவும், புத்திசுயாதீனமுடையவராகவும் இருத்தல்.

★ வாடகைக்கு விடும் பொருள் பயன்படும் தன்மையில் இருத்தல்.

★ வாடகைத் தொகை, காலம் அறியப்பட்டதாக இருத்தல்.

★ இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்ட (ஹராமான) விடயங்களுக்கு வாடகைக்கு கொடுக்காதிருத்தல்.

வாடகைக்கு ஏதேனும் ஒன்றை எடுப்பவர் அப்பொருளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமான முறையில் நடந்து கொள்ள வேண்டும். கவனக் குறைவு, பொறுப்பற்ற தன்மை மூலம் ஏற்படும் நட்டத்துக்கு வாடகைக்கு எடுத்துக் கொண்டவரே பொறுப்பாளர், இஸ்லாம் தடுத்துள்ள பொருளாதார நடவடிக்கைகளுள் மிக முக்கியமானதொன்றை அடுத்து நோக்குவோம்.

## (IV) வட்டி

மனிதன் தனது பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யக் கையாளும் மற்றொரு வழி வட்டி f F f கடன் பெறுவதாகும். இது இஸ்லாத்தில் முற்றிலும் தடுக்கப்பட்ட ஒரு முறையாகும்.

மற்றவர்களின் பொருளைப் பிழையான முறையில் உண்பதாகவே அது கணிக்கப்படுகிறது. அல்லாஹ் அல்குர்ஆனில் :

" يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوْا لاَتَاكُلُوْا أَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ "

“ஈமான் கொண்டவர்களே! உங்களில் ஒருவர் மற்றவரின் பொருளை அநியாயமான முறையில் உண்ண வேண்டாம்” என்று கூறியுள்ளான். (04:29)
வட்டி என்பது அல்லாஹ்வினதும், நபியவர்களதும் கோபத்தையும், சாபத்தையுமே எமக்குத் தேடித் தருகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வட்டி எடுப்பவரையும், வட்டி கொடுப்பவரையும், அதற்காக எழுதுவோரையும், அதற்கு சாட்சிகளாக இருப்போரையும் சபித்துள்ளார்கள். வட்டித் தொடர்பை விடாதவர்கள்

அல்லாஹ்வுடனும், அவன் தூதருடனும் போர்ப் பிரகடனம் செய்பவர்களாகவே கணிக்கப்படுகின்றனர்.

அல்லாஹ் அல்குர்ஆனில் :

" فَإِنْ لَّمْ تَفْعَلُوْا فَأْذَنُوْا بِحَرْبٍ مِنَ اللهِ وَرَسُوْلِهِ "

“நீங்கள் வட்டியிலிருந்து நீங்காவிட்டால் அல்லாஹ்வுடனும் அவன் தூதருடனும் யுத்தப் பிரகடனம் செய்யுங்கள்” என்று கூறியுள்ளான். (02:279)

இந்த வசனம் அருளப்பட்ட போது குறைஷியர் மத்தியில் பரவலாகப் பல்வேறு வகையான வட்டி முறைகள் இருந்தன. அவற்றில், கடன் கொடுத்து தவணைமுடிய வட்டி வீதத்தை கூட்டிக் கொள்வது பிரதான இடத்தை வகித்தது. பிறர் பொருளைப் பிழையான முறையில் ஈட்டி வயிறு வளர்ப்பது எவ்வளவு பெரிய அநியாயம் என்பதையும், சமூகத் துரோகம் என்பதையும் சிந்திப்போர் விளங்கிக் கொள்வர். வட்டியோடு தொடர்புடையவர்கள் எத்தனையோபேர் தம் செல்வங்களை இழந்து பரிதவிக்கும் நிலையை எப்போதும் நாம் காண்கின்றோம்.வட்டியின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கு ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம்.

ஒருவர் ஒரு தொழில் முயற்சியை ஆரம்பிக்கின்றார். அதற்கு 10 வீதமான தொகையைத் தன்னிடமிருந்து முதலீடு செய்கின்றார். 90 வீதமான தொகையை வங்கியொன்றிடமிருந்து வட்டி முறையில் பெற்றுக் கொள்கின்றார். அவருக்கு 50 வீத இலாபம் கிடைக்கிறது. இலாபத்தில் 20 வீதத்தை வங்கிக்கு வட்டியாகச் செலுத்துகின்றார். அந்த வட்டித் தொகையில் 60 வீதம் வங்கியில் பணம் வைப்புச் செய்துள்ள பங்காளிக்குக் கொடுக்கப்படுகின்றது. இலாபத்தில் 80 வீதத்தை வெறும் 10 வீதம் முதலீடு செய்தவர் அடைகின்றார். வட்டியாகச் செலுத்திய 20 வீதமும் பொருளின் உற்பத்திச் செலவில் சேர்க்கப்பட்டு இறுதியில் நுகர்வோரிடமிருந்தே அறவிடப்படுகின்றது. எனவே முதலீடு செய்தவர் 100 வீத இலாபத்தை வெறும் 10 வீத முதலீட்டுடன் அடைந்து கொள்வதால் பொருளாதாரப் பங்கீடு சமமற்றுக் காணப்படுகிறது. அதனால் தொழிலின்மை, வறுமை, திருட்டு, கொலை, கொள்ளை ஆகிய அனைத்து சமூக விரோத செயல்களும் ஏற்படுகின்றன.

ஆனால் வட்டி தவிர்ந்த இஸ்லாமிய முறையில் அமையப்பெற்ற முழாரபா, முராபஹா போன்றன பொருளாதாரச் சமபங்கீட்டுக்கு வழி செய்கின்றன. சமூகச்

சீர்கேடுகளிலிருந்து மனித இனம் பாதுகாகக்கப்படவும் காரணமாகிறது. இன்றும் வட்டி பல்வேறு பெயர்களில் அறிமுகம் செய்யப்படுகின்றது. இஸ்லாமியப் பொருளீட்டல் முறையைப் புரியாத சிலர் வட்டி மூலம் பெறப்படுவதை வியாபாரத்தின் மூலம் அடையப்படும் இலாபத்திற்கு சமப்படுத்துகின்றார்கள். இது யூதர்களின் சிந்தனையாகும். நஷ்டத்தையும் ஏற்க முன்வருபவனே இலாபத்தில் பங்கு பெறத் தகுதியுடையவன் என்பது இஸ்லாமியச் சிந்தனையாகும். நாம் இப்போது வியாபாரத்திற்கும் வட்டிக்கும் இடையில் உள்ள முக்கிய வேறுபாட்டைப் புரிந்து கொண்டோம். எனவே வட்டியின் தீங்கிலிருந்து நாம் பாதுகாப்புப் பெறுவோம்.

## செயற்பாடு

1. அடகு வைப்பதற்கு இஸ்லாத்தில் அனுமதியுள்ளதா? அதன் நிபந்தனைகளைக் கூறுக.

2. வாடகையின் நிபந்தனைகளைக் கூறுக.

3. வட்டியின் தீங்கு பற்றிக் கூறும் இரு அல்குர்ஆன் வசனங்களைக் குறிப்பிடுக.

4. வட்டி பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன?

5. வட்டியைச் சமூகத்திலிருந்து ஒழிப்பதற்கான வழிமுறைகள் எவை?

## (V) வஸிய்யத்

- மனிதன் எப்போதும் தர்மம் செய்யும் உயர்குணமுடையவனாக இருக்க வேண்டும். அதன் ஒரு வழியே மரணப் படுக்கைக்குச் செல்ல முன் தன் சொத்துக்களுள் ஒரு பகுதியை வஸிய்யத்செய்வதாகும்.
- ஒருவன் மரணிப்பதனைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினர் வறுமையில் சென்றடையாதிருக்கவே அவர் விட்டுச் செல்லும் சொத்துக்கள் அனந்தரக்காரர் மத்தியில் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது.
- நிலையான தர்மமே (ஸதகதுல் ஜாரியா) எப்போதும் பயன்தரவல்லது.

ஒரு மனிதன் மரணித்ததன் பின்னர் அவனதுசொத்துக்களில் ஒரு பகுதி மற்றவர்களைச் சென்றடையும் வழிகளில் வஸிய்யத்தும் ஒன்றாகும். ஒரு பொருளையோ அல்லது ஒரு சொத்தையோ அல்லது அதன் பயனையோ ஒருவர் தன்னுடைய மரணத்திற்குப் பின்னர் வேறொருவருக்கு உரிமை மாற்றம் செய்து கொடுப்பது வஸிய்யத் எனப்படும். இதனை மரண சாசனம் என்றும் கூறுவர். இவ்வாறு ஒருவர் இறுதித்தறுவாயில் வஸிய்யத் செய்யும் போது மூன்றில் ஒரு பகுதியையே வஸிய்யத் செய்ய முடியும். இதற்கு மேல் வஸிய்யத் செய்தால் அதனை அங்கீகரிப்பதும் நிராகரிப்பதும் வாரிசுகளின் உரிமையாகும். ஒரு முறை ஸஃத் இப்னு அபீவக்காஸ் ரழியல்லாஹு அன் ` { அவர்கள் வஸிய்யத் செய்ய விரும்பிய போது நபியவர்கள் அனுமதித்து விட்டு மூன்றில் ஒரு பகுதியும் அதிகமாகும். நீர் உம்முடைய சந்ததியினரை ஏழையாக விட்டுச் செல்வதை விட உன் சொத்தினை அவர்களுக்கு விட்டுச் செல்வது சிறந்ததாகும் என்றார்கள்.

### வஸிய்யத் செல்லுபடியாவதற்கு பின்வரும் விடயங்கள் இன்றியமையாததாகும்.

1. வஸிய்யத் செய்கின்றவர் பருவ வயதுடைய, புத்தியுடையவராக இருக்க வேண்டும்.
2. பலவந்தமின்றி சுயவிருப்பத்துடன் வஸிய்யத் செய்ய வேண்டும்.
3. எழுத்து மூலம் அல்லது தெளிவான வார்த்தைகளால் வஸிய்யத் செய்யப்பட வேண்டும்.

4. வஸிய்யத் செய்பவர் மரணித்ததன் பின்னரே இது செல்லுபடியாகும்.
5. வஸிய்யத் செய்யப்படுபவர் வாரிசுகளாக இருத்தல் கூடாது.

“ஒரு முஸ்லிமிடம் வஸிய்யத் செய்ய வேண்டியுள்ள ஒரு பொருள் இருக்கிறது. அவர் அந்த வஸிய்யத்தை எழுதி வைக்காது இரு இரவுகள் கழிப்பது கூடாது.” என்பது நபி மொழியாகும்.

### வஸிய்யத் செய்பவருக்குள்ள உரிமைகள்

1. வஸிய்யத் செய்தவர் தான் செய்த வஸிய்யத்தை நீக்குவதற்கு உரிமை பெற்றவராவார்.
2. வஸிய்யத் செய்த பொருளை வேறு ஒன்றாக மாற்றும் உரிமையும் அவருக்கு உள்ளது.

மரண வேளையில் உள்ள ஒருவர் தனது சிறு குழந்தைகளின் நலன் கருதியும், தன் மீதுள்ள கடன்களை நிறைவேற்றுவதற்காகவும் ஒருவரை ஏற்படுத்தலாம். அவரை ‘வஸிய்யு’ என்று சொல்லப்படும். அவ்வாறு ஏற்படுத்தப்படுபவர்,

1. முஸ்லிமாகவும்,
2. நேர்மையானவராகவும்,
3. வஸிய்யத்துக்குத் தகுதியானவராகவும்,
4. தான் பொறுப்பேற்கும் வஸிய்யத்தை நிறைவேற்றும் சக்தி உள்ளவராகவும், இருத்தல் வேண்டும்.

இவ்வாறு வஸிய்யத்தின் ஒழுங்குகளை இஸ்லாம் வகுத்துத் தந்துள்ளதன் மூலம் சொத்துள்ள ஒருவரின் சொத்துக்கள் வீண் போகாமல் அது உரியவர்களுக்குச் சென்றடையவும் இஸ்லாம் வழிகாட்டியுள்ளது.

நவீன உலகில் கூட சில ஒப்பந்தங்களில் சம்பந்தப்பட்டவர் இல்லாத போது யார் பொறுப்பாக நிற்பார் என்ற ஒரு விபரம் எழுதப்படுவதை நாம் பார்க்கிறோம். அவ்வாறு நியமனம் செய்யப்படுபவர் தான் “வஸிய்யு” எனப்படுகிறார்.

## பயிற்சி

1. வஸிய்யத் என்றால் என்ன?
2. வஸிய்யத்துக்குரிய நிபந்தனைகளைக் குறிப்பிடுக.
3. "வஸிய்யு" என்பவர் யார்?
4. வஸிய்யத் செய்பவருக்குள்ள உரிமைகள் யாவை?

## (VI) வராஸத் (அனந்தரச் சொத்துக்கள்)

ஒரு மனிதன் பிறக்கும் போது எதனையும் கொண்டு வருவதில்லை. மரணிக்கும் போது எதனையும் தன்னுடன் எடுத்துச் செல்வதுமில்லை அவன் வாழும் நாட்களில் பல வழிகளில் சொத்துக்களைப் பெற்றுக் கொள்கின்றான். வாழும் போது அவைகளை அனுபவிப்பதுடன் தன்வசதிக்கேற்ப குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றான். அவன் மரணிக்கும் போது அவனுக்குரிமையான சொத்துக்கள் அனைத்தையும் விட்டுச் செல்கின்றான். இது வராஸத் எனும் அனந்தரச் சொத்துக்கள் எனப்படும்.

இச்சொத்துக்களில் ஜனாஸாவுக்கான கடன்கள், வஸிய்யத் முதலியவைகளை நிறைவேற்றிய பின்னர் மீதியான சொத்துக்கள் சரியான முறையில் வாரிRகள் மத்தியில், குர்ஆனில் குறிப்பிடப்பட்ட முறையில் பகிரப்பட வேண்டும்.

இச்சொத்துப் பங்கீடு சம்பந்தமாக அல்குர்ஆன் ஸுன்னா ஆகியன தெளிவாக கூறியுள்ளன. இதனை மறுப்பவர்கள் இஸ்லாத்திலிருந்து நீங்கியவராகக் கருதப்படுகின்றார்கள். இஸ்லாம் இச்சட்டத்திற்கு முக்கிaத்துவம் வழங்கியுள்ளதோடு இச்சொத்துக்கள் எவ்வாறு உரித்தானவர்களுக்கு மத்தியில் பங்கிடப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தியுள்ளது. இதனைப் பெறத் தகுதியுடையோர் மூன்று பிரிவினர்களாக வகுக்கப்பட்டுள்ளனர் அவர்கள் :

1) அஸ்ஹாபுல் புரூள்
2) அஸபா
3) அல் அர்ஹாம்

ஒருவர் மரணித்தால் அவரது பெற்றோர் சகோதர சகோதரிகள், மனைவி மக்கள் ஆகிய அவருக்கு மிக நெருக்கமாகக் கருதப்படக் கூடியவர்களுக்கே அச்சொத்துக்கள் சென்றடைவது நியாயமாகும்.

இவ்வாறு மரணித்தவரின் சொத்துக்கள் மேற்குறித்த இவர்களுக்கன்றி வேறு எவருக்கும் சென்றடைவது சில வேளை அநியாயமாகக் கூட ஆகிவிடலாம். எனவே தான் ஒருவர் இறந்து விட்டால், அவருடைய சொத்துக்களை யார்? யார்? அனந்தரம் கொள்ள உரித்துடையவர் என்பதை அல்லாஹ் தெளிவாகவே அல்குர்ஆனில் அந்நிஸா அத்தியாயத்தில் 11, 12 ஆகிய வசனங்களில் கூறியுள்ளான்.

மேற்குறித்த வசனத்தில் அனந்தரக்காரர்கள் யார், அவர்களுக்கு என்ன பங்கு உள்ளது என்பது தெளிவாக உள்ளது. அவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

### பாகப் பங்கீடு பெறத் தகுதியுடைய ஆண்கள்

1. மகன்
2. தந்தை
3. பாட்டன்
4. சகோதரன் (கூடப்பிறந்தவர்- தாய்வழி, தந்தைவழி)
5. மகனின் மகன்
6. சகோதரனின் மகன்
7. கணவன்

### பாகப் பங்கீடு பெறத் தகுதியுடைய பெண்கள்

1. மகள்
2. தாய்
3. பாட்டி
4. மகளின் மகள்
5. மனைவி
6. சகோதரி (கூடப்பிறந்தவர்- தாய்வழி, தந்தைவழி)

இவர்களைத் தவிர உள்ள மற்ற உறவினர்கள் பங்குதாரர்களாக ஆக முடியாது. பங்கீடு செய்யப்படும் போது ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் இருப்பார்கள் என்றால் பின்வருவோர் அனந்தரம் பெறுவர் :

**01. தந்தை 02. மகன் 03. மகள் 04. தாய்**

**05.கணவன், மனைவி ஆகிய இருவரில் ஒருவர்**

ஏனையோர் பங்கீடு பெறும் விடயத்தில் நிபந்தனைகளும், வரையறைகளும் உள்ளன. அல்லாஹ் விதித்த இந்தப் பங்கீட்டில் மாற்றம் கொண்டுவரும் அதிகாரம் எவருக்கும் கிடையாது. இவ்வாறு பாகப் பிரிவினை முறை வகுக்கப்பட்டதால் பின் வரும் சிறப்புகள் பேணப்பட்டுள்ளன :-

- ★ ஒருவரின் மரணத்தின் பின் அவரது சொத்துக்களுக்கு உரித்துக் கொள்ள மிகவும் நெருக்கமானவர்களுக்கு அது சென்றடைகின்றது.
- ★ மரணத்தின் பின்பும் உறவு அதன் மூலம் தொடர்கின்றது.
- ★ ஒருவர் இறந்தாலும் அவரைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு வகைக்காப்பீடாக அனந்தரச் சொத்துக்கள் அமைந்து விடுகின்றன.

**மரணித்தவரின் சொத்துக்கள் பங்கீடு செய்யப்பட முன் சில விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படல் அவசியமாகும்.**

**அவையாவன**

- ★ அவரது கடன்கள் அடைக்கப்பட வேண்டும்.
- ★ அவர் கொடுக்க வேண்டியுள்ள ஸகாத் நேர்ச்சை போன்றவை கொடுக்கப்பட வேண்டும்.
- ★ கபன் செய்து அடக்கப்படுவதற்குத் தேவையான செலவுகள் வேறுபடுத்தப்பட வேண்டும்.
- ★ வஸிய்யத் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஒருவரின் மரணம் உறுதியாகிவிட்டால் அவருடைய சொத்துக்கள் மேற்குறித்த பங்காளிகளுக்குச் சென்றடைய முன் அவர்களில் காணப்பட வேண்டிய சில நிபந்தனைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

- ★ பங்காளர்கள் அனைவரும் உயிருடன் இருப்பது உறுதி செய்யப்படல்.
- ★ மரணமானவருக்கும், சொத்தில் பங்கு பெறுபவருக்குமிடையில் உள்ள உறவு உறுதி செய்யப்படல்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்ட போதிலும் பின் வரும் காரணங்களினால் ஒருவன் தனக்குரிய பங்கை இழந்து விடுகின்றான்.

★ அடிமையாக இருத்தல்.

★ சொத்துரிமையாளரை வாரிசு கொலை செய்தல்.

★ அவ்விருவரும் வேறுபட்ட தீனில் (மார்க்கத்தில்) இருத்தல். உதாரணமாக : மரணித்தவர் முஸ்லிமாகவும், அனந்தரம் பெறுபவர் காபிராகவும் இருத்தல்.

எனவே நாம் எமது வாழ்வில் அல்லாஹ் காட்டிய பாகப் பிரிவினை முறையை அமுல்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்வது அல்லாஹ்வின் தீனை நிலை பெறச் செய்வதாகும். இது njhlughd கல்வியை நாம் தேடிப் படிப்பது கடமையாகும். ஏனெனில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு எச்சரிக்கை செய்தார்கள்.

" أَوَّلُ مَا يُنْسَى مِنَ الْعِلْمِ عِلْمُ الْفَرَائِضِ "

“அறிவுகளில் முதன்முதலில் மறக்கடிக்கப்படுவது அனந்தரப் பங்கீடு பற்றிய (பராஇழுடைய) அறிவாகும்”

**பயிற்சி**

1. பாகப்பிரிவினையின் பிரயோசனங்களைக் குறிப்பிடுக.
2. பாகப் பங்கீடு பெறுவதைத் தடை செய்யும் ஒரு விடயத்தைக் கூறுக.
3. பாகப் பங்கீட்டு முறையைக் குறை கூறுபவர்களை இஸ்லாம் எவ்வாறு நோக்குகிறது?
4. மரணமானவரின் பொருள் விடயமாகக் கவனிக்கப்பட வேண்டிய கடமைகள் என்ன?
5. சொத்துரிமை பெறத் தகுதியான பெண்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

## (VII) வக்ஃப்

ஸபிய்யா ஆசிரியை வகுப்பறைக்கு ஸலாம் கூறிக் கொண்டு நுழைந்தார். சகல மாணவிகளும் பதில் ஸலாம் கூறி மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். இஸ்லாம் பாட ஆசிரியையின் வருகை மாணவிகளுக்கு புதுத்தெம்பொன்றைக் கொடுத்தது. ஏனென்றால் இன்று அக்கிராமத்தில் பள்ளிவாசலுக்கு ஒரு செல்வந்தர் காணியொன்றை வக்.ஃ.ப் செய்யும் நிகழ்ச்சி முடிந்து சிறிது வேளையில்தான் இஸ்லாம் பாடம் ஆரம்பமாகியது. ஆதலால் மாணவிகள் வக்பைப் பற்றி அறிந்து கொள்ளவே ஆர்வத்தோடு இருந்ததை ஆசிரியை கண்டார்.

**ஆசிரியை** : மாணவிகளே! இன்று நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பது ஏன்?

**மாணவிகள்** : இன்று எங்கள் ஊரில் நடந்த விடயத்திற்கும் இன்றைய பாடத்திற்கும் தொடர்பு இருப்பதால் தான்.

**ஆசிரியை** : இன்று உங்கள் ஊரில் உள்ள ஒரு செல்வந்தர் பள்ளி வாசலுக்கு ஐந்து ஏக்கர் தென்னங்காணியை வக்.ஃ.ப் செய்தார். தர்மங்களில் மிக உயர்ந்த நன்மை சேர்க்கும் காரியங்களில் இதுவும் ஒன்றாகும்.

**ஒரு மாணவி** : வேறு காரியங்களும் மரணத்தின் பின் நன்மையைச் சேர்த்துத் தருமா?

**ஆசிரியை** : ஆம், மூன்று காரியங்கள் ஒரு மனிதனின் மரணத்தின் பின் நன்மையைக் கொடுத்துக் கெண்டே இருக்கும். இது பற்றி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளாரகள்.

" إذَا مَاتَ ابْنُ آدَمَ انْقَطَعَ عَمَلُهُ إلاَّ مِنْ ثَلاَثٍ عِلْمٍ يُنْتَفَعُ بِهِ ، أَوْ وَلَدٍ صَالِحٍ يَدْعُوْ لَهُ ، أَوْ صَدَقَةٍ جَارِيَةٍ "

ஆதமுடைய மகன் மரணித்து விட்டால் அவனது செயல்கள் அனைத்தும் துண்டிக்கப்படுகின்றன. ஆனால் மூன்று செயல்களுக் குரிய நன்மை தொடர்ந்து கொண்டிருக்கும். m i t a h t d பயன் அளிக்கும் கல்வி தனக்காக துஆச் செய்யும் பிள்ளை, நிலையான தர்மம்.

**மாணவி** : நிலையான தர்மம் என்ற அப்பொருளை இறந்தவர்களின் குடும்பத்தினர் அனந்தரமாகப் பெற முடியாதா?

**ஆசிரியை** : பள்ளிக்கோ, பாடசாலைக்கோ, பொதுப்பயனுக்கோ தர்மமாக விடப்படும் சொத்து வக்.ஃப் எனப்படுகின்றது. இதனை எவரும் விற்கவோ, அனந்தரம் கொள்ளவோ முடியாது. எனவே நீங்கள் கேட்டது போல் வக்.ஃப் செய்யப்பட்ட பள்ளிக் காணியை வக்.ஃ. ப் செய்தவரின் குடும்பத்தவர்கள் அனந்தரமாகப் பெற முடியாது.

**மாணவி** : இலங்கையில் வக்.ஃப் சம்பந்தமான விடயங்களுக்குப் பொறுப்பாக எந்தத் திணைக்களம் செயல்படுகின்றது என்பதைக் கூறுவீர்களா?

**ஆசிரியை** : முஸ்லிம் கலாச்சாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள வக்.ஃப் பிரி t hd J இலங்கையில் உள்ள சகல பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரிகள், அனாதை இல்லங்கள் M f¡a tww¡d வக்.ஃப் களையும், தர்மச் சொத்துக்களையும் கண்காணித்து வருகின்றது.

**ஆசிரியை** : உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவிலே பி.ஃ. ரு ரூமா என்ற கிணற்றை விலை கொடுத்து வாங்கிப் பொதுப் பயனுக் f ாக வக்.ஃப் செய்தார்கள்.

**மாணவி** : உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மாத்திரமா வக்.ஃப் செய்துள்ளார்கள்? உமர் uo¡a y yh ` { md ` { அவர்கள் தனது குதிரையை யுத்தத் தேவைக்காக வக்.ஃப் செய்தார்கள். நம் நாட்டிலும் அனேகமான மஸ்ஜித்கள், மத்ரஸாக்கள், அனாதை இல்லங்கள் போன்றன வக்.ஃப் சொத்துக்களின் மூலமே பராமரிக்கப்படுகின்றன.

**மாணவி** : இன்று தான் நாங்கள் ஒரு தெளிவைக் கண்டோம். அல்லாஹ்வுக்காக வேண்டியென்று செய்யப்படும் ஒரு தர்மமாக உள்ள வக்.ஃ.ப் மரணத்தின் பின் தொடர்ந்துk நன்மை i a j தருகிறது என்பதை அறிந்து கொண்டோம். ஸஹாபாக்கள் காலம் முதல் இன்று வரை இருந்து வரும் இந்த சிறப்பான காரியம் நம் நாட்டிலும் காணப்படுகிறது என்பதையும் விளங்கினோம். நம் ஊரிலும் வக்.ஃ.ப் செய்யும் தனவந்தர்களை ஏற்படுத்தித் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் அல்ஹம்து லில்லாஹ்.

## பயிற்சி

1. **வக்.ஃ.ப் என்று எவ்வகைத் தர்மத்திற்குச் சொல்லப்படும்?**
2. **வக்.ஃ.பின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.**
3. **வக்.ஃ.ப் செய்தவருக்குக் கிடைக்கும் நன்மை யாது?**

**செயற்பாடு:**

வராஸத், வக்.ஃ.ப், வஸிய்யத் என்பன சமூக வாழ்வுக்கு எவ்வகையில் பங்களிப்புச் செய்கின்றன. என்பதைச் சுருக்கமாக விளக்குக.